திரும்ப கட்டுதல் திட்டத்தின்கீழ் 215 பாலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் அனுமான் நதி பாலமும் இடம் பெற்றுள்ளது. வருகின்ற நிதியாண்டில் 'நபார்டு' நிதி உதவி கிடைத்தவுடன் இப்பணி விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். சுப்பையா பாண்டியன்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

63—

சட்டக் கல்லூரி

வினா 63263—திரு. கே.எஸ். தென்னரசு:

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். தென்னரசு.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 4]

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலிருந்து சட்டப் படிப்பு படிப்பதற்கு கோவை மற்றும் திருச்சி நகரங்களுக்கு செல்லவேண்டியிருப்பதால் ஏழையெளிய மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஈரோடு நகரம் வளர்ந்துவரும் பெரிய நகரமாகும், மேலும் ஈரோடு, மாவட்டத்தின் தலைநகரமாகவும் உள்ளதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 17-11-2003 இல் செங்கற்பட்டில் ஒரு சட்டக் கல்லூரி தொடங்கியதுபோல, ஈரோடு மாவட்டத்தில் சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டால் ஈரோடு, சேலம் நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் கல்வி ஆண்டிலாவது ஈரோட்டில் சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சட்டக் கல்வித் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மொத்தம் ஐந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஈரோட்டிலேயும் ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார்கள். சேலத்திலே சுயநிதிக் கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கின்றது. அந்தக் கல்லூரியிலே இல்லையென்றால், அவருக்கு பக்கத்து மாவட்டமான கோயம்புத்தூரிலே ஓர் அரசுக் கல்லூரி இருக்கின்றது, அந்தக் கல்லூரியிலே மாணவ மாணவிகள் சேர்ந்து பயன்பெறலாம். மாணவர்களிடையே சட்டம் படிக்கவேண்டுமென்கின்ற ஓர் ஆர்வம் மிகுதியாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், ஒவ்வோர் ஆண்டும் விண்ணப்பங்கள் அதிகமாக வருகின்ற நிலையில், அவர்களுக்கு சட்டக் கல்வி அளிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் விருப்பம். எனவே, அதனை ஓர் அடிப்படைக் கருத்தாகக் கொண்டுதான், மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டம் பயில்கின்ற படிப்பிற்கு 680 இடங்களை 2002-2003 ஆம் கல்வி ஆண்டில் அதிகப்படுத்தி உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே 680 மாணவர்கள் கூடுதலாக சட்டம் பயில்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது.

[2005 மார்ச் 4

முற்பகல் 10-10

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது சட்டம் படிக்கக்கூடிய ஆர்வம் இன்று மாணவர்களிடையே அதிகமாக இருக்கிறது என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பட்சத்தில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் ஆங்கே இருக்கைகளைப் பெருக்குவதைவிட, ஆங்காங்கே சில சட்டக் கல்லூரிகளை நீங்கள் உருவாக்கினால்தான், மாணவர்கள் அதிகமாகச் சேரக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். ஏற்கெனவே, 2000 ஆம் ஆண்டு இதே அவையில் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே வேலூரில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பு அப்படியே நின்றுவிட்டிருக்கிறதே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி அறிந்திருப்பாரேயானால், ஏன் இதுவரை வேலூரிலே அரசு சட்டக் கல்லூரியை, அரசு ஏற்கெனவே அறிவித்தவாறு தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுபோல, அறிவிப்பு ஏதும் அரசு வெளியிடவில்லை. அரசின் கருத்தாக, அது தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்று அதில் சொல்லப்பட்டிருக்கலாம். எனவே, சட்டக் கல்லூரி ஒன்று ஆரம்பிப்பதற்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், இதிலே உள்ள நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். மாணவர்களுடைய தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையிலே-entrance exam, அதே போன்று அவர்கள் இறுதியாண்டிலே பிளஸ்-2-விலே எடுக்கின்ற மார்க் அடிப்படையில் தேர்வு நடத்தி, தகுதியின் அடிப்படையிலே தேர்வு செய்யப்படுகின்றனர். அதில் குறைந்த மார்க் எடுக்கின்றதை அடிப்படையாக வைத்து ஒரு Self Financing கல்லூரி, இப்போது செங்கல்பட்டிலேகூட ஒரு constituent college ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த constituent college செங்கல்பட்டிலே ஆரம்பிக்கும்போது, நம்முடைய மாணவர்கள் வெளி மாநிலத்திற்குச் சென்று படிக்கின்றார்கள். இங்கே அவர்கள் அதைக் காட்டிலும் குறைந்த அளவுக்குக் கட்டணம் செலுத்தி படிக்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்று அவர்கள் சட்டக் கல்வியை எளிதிலே பெற முடியும்

2005 மார்ச் 4]

என்கின்ற அந்த உயரிய எண்ணத்தோடுதான் அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது. ஆனால், சேர்ந்துவிட்டு கட்டணம் உயர்வு என்கின்ற நிலையிலே இருக்கும்போது, அதை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் constituent college, அதாவது constituent கல்லூரி அங்கே அமைப்பதற்கு அவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால், அதை அமைப்பதற்கு அரசுக்கு எந்தவித மாறுபட்ட கருத்தும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ப. அரசன். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவைக்கு தவறான தகவல் தரக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விளக்கம் நிறைய சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேரகன்: தவறான தகவலை அவையில் பதியக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெத்தப் பணிவன்போடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில்—அரசாங்கம்—நீங்கள் ஒரு சட்ட அமைச்சர்—அந்தத் துறையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னர், (குறுக்கீடு) அதிலே சொல்லப்பட்டிருக்கிறது, தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருப்பதை, அது கருத்து என்று கருத முடியாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, வேலூரில் அரசு சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு அந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே அது குறிப்பிடப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) 2000 ஆம் ஆண்டில் என்றால், அவர்களைப் போய் கேளுங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அரசன் அவர்கள்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: தொடக்கத்திலேயே நான் அரசு என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி நேரத்திலே அரசியல் பேசக்கூடாது என்கிற அடிப்படையில் நான் குற்றம் சொல்லவில்லை. இந்த வாக்குறுதிகளை எளிதில் கொடுத்துவிடலாம். கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவது என்பதுதான் அதன் சிறப்பு. எனவே கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுகின்ற ஓர் அரசு என்று சொன்னால் அது நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய வேறு எந்த அரசையும் சொல்ல முடியாது.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 64, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட வேண்டும். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைகளில் பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்.

64—

கூட்டுறவு வங்கி

***34195—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் வெங்கம்பாக்கம் கூட்டுறவு வங்கியை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?